யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 10 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

பெயர் / சுட்டெண் : ..... திருமதி.சு.கௌசல்யா B.Com, PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

கணக்கீட்டுச் சமன்பாடு

❖ சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்

பயிற்சி - 01

தரண் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமும் மற்றும் அவற்றைப் பழுது பார்க்கும் வணிகத்தின் ஜனவரி மாதத்திற்குரிய பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் உமக்கு தரப்படுகின்றன.

1. உரிமையாளரால் இடப்பட்ட மூலதனம் ரூ. 600 000
2. வணிகத்தின் மாதந்த வாடகை ரூ. 20 000 செலுத்தப்பட்டது.
3. நிலையான வைப்பில் இடப்பட்டது ரூ. 50 000
4. யைடக்கத் தொலைபேசி பழுதுபார்த்தல் மூலம் பெற்ற வருமானம் ரூ. 15 000
5. தரண் தனிப்பட்ட தேவை கருதி ரூ. 10 000 வணிகத்தில் இருந்து எடுத்துக்கொண்டார்.
6. ரூ. 100 000 பெறுமதியான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
7. மாதாந்த மின்சாரக் கட்டணம் ரூ. 6000 செலுத்தப்பட்டது.
8. வங்கிக் கடன் ரூ. 200 000 பெறப்பட்டது.
9. மேலதிக மூலதனம் ரூ. 100 000 ஈடுபடுத்தப்பட்டது.
10. வங்கிக் கடன் மீளச் செலுத்தியது ரூ. 20 000

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை முறையை பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்திக் காட்டுக.

இலக்கம்	சொத்துக்கள்(ரூ) = உரிமை + பொறுப்புக்கள்				
	இயந்திரம்	நிலையான வைப்பு	காசு	உரிமை	வங்கிக்கடன்
1					
2					
3					
4					
5					
6					

7					
8					
9					
10					
இறுதி மீதி					

❖ சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்
உரிமை = சொத்துக்கள் - பொறுப்புக்கள்
பொறுப்புக்கள் = சொத்துக்கள் - உரிமை

பயிற்சி - 02

1) கயல்விழி வணிகத்தின் 2019.12.01 திகதியன்று காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு.
சொத்துக்கள் = ரூ. 800 000
பொறுப்புக்கள் = ரூ. 500 000
உரிமையின் பெறுமதி யாது?

2) கண்ணன் வணிகத்தின் 2020.12.01 திகதியன்று காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு.

சொத்துக்கள்	ரூ
இயந்திரம்	1400 000
சரக்கிருப்பு	100 000
காசு	300 000
கடன்பட்டோர்	150 000

பொறுப்புக்கள்	ரூ
கடன் கொடுத்தோர்	200 000
வங்கிக் கடன்	150 000

உரிமையின் பெறுமதியைக் கணிப்பிடுக.

பயிற்சி - 03

1. உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் 4 குறிப்பிடுக.
2. ரேணுகா வணிகத்தின் கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாடு 2020 பங்குனி மாதத்தின் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களைக் காட்டுகின்றது.

திகதி	சொத்துக்கள்(ரூ) = உரிமை + பொறுப்புக்கள்					
	தளபாடம்	+சரக்கிருப்பு	+கடன்பட்டோர்	+காசு	உரிமை	+கடன் கொடுத்தோர்
2020.03.01	300 000	+200 000		+ 400 000	600 000	300 000
2020.03.05				+ 300 000	+ 300 000	
2020.03.06		-100 000	+ 120 000		+ 20 000	
2020.03.10		+ 50 000				+ 50 000
2020.03.15	+ 100 000				+ 100 000	
2020.03.18		-20 000			-20 000	
2020.03.20			-20 000	+ 20 000		
இறுதி மீதி	400 000	130 000	100 000	720 000	1000 000	350 000

மேற்குறிப்பிட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டுத் தாக்க விளைவுகளிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.

பயிற்சி - 04

வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

திகதி	சொத்துக்கள்	= உரிமை	+பொறுப்புக்கள்
Jan 1	அதிகரித்தல்	= அதிகரித்தல்	
Jan 5	அதிகரித்தல் குறைதல்		
Jan 10	அதிகரித்தல்		அதிகரித்தல்
Jan 15	குறைதல்	குறைதல்	
Jan 20	குறைதல்		குறைதல்
Jan 25	குறைதல் அதிகரித்தல்		

மேற் காட்டிய அட்டவணைக்கேற்ப ஒவ்வொரு தினத்திலும் நிகழ்ந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.

பயிற்சி - 05

❖ கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவு

1. கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவு என்றால் என்ன? உதாரணம் தருக.
2. இரட்டைப் பதிவு முறைமை என்றால் என்ன?
3. கணக்குகளின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொரு கணக்கிற்கும் 2 உதாரணங்கள் தருக.
4. இரட்டைப் பதிவு தத்துவத்திற்கு அமைய கீழே தரப்பட்ட ஒவ்வொரு கணக்குகளின் பெறுமானங்களில் அதிகரித்தல் அல்லது குறைத்தல் வரவுப் பக்கத்திலா அல்லது செலவுப் பக்கத்திலா பதிவு செய்யப்படும் என்பதைக் குறித்துக் காட்டவும்.

இலக்கம்	கணக்கின் பெயர்	அதிகரித்தல்	குறைத்தல்
1.	தளபாட கணக்கு		
2.	வாடகை கணக்கு		
3.	வட்டி மானக் கணக்கு		
4.	கடன் கொடுத்தோர் கணக்கு		
5.	மூலதனக் கணக்கு		
6.	கடன்பட்டோர் கணக்கு		
7.	மின்சாரக் கட்டணக் கணக்கு		
8.	காசுக் கணக்கு		
9.	பற்றுக் கணக்கு		
10.	வங்கிக் கடன் கணக்கு		

***